(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (a) No, Sir.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI: ஜவ்வாது மலைப் பகுதியில் ஏறத்தாழ 20,000 மக்கள் குடியிருக்கிறார்கள். மலை மேலிருந்து கீழே இறங்கி வருவதற்கு ஒரே ஒரு பாதைதான் இருக்கிறது. அதுவும் கரடு முரடாக இருக்கிறது. அதைத் தார் ரோடாக மாற்றுவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வகை செய்து, அதை நிறைவேற்ற சர்க்கார் முடிவு செய்வார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 18 மைல் தூரம் வேலை செய்வதற்காக 2 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் அளவில் செலவு செய்யத் திட்டமிட்டு, அதுவும் நடந்து வருகிறது. இன்னும் நான்கு மைல்கள் 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஜில்லா போர்டு வழியாகவும் போட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI S. M. ANNAMALAI: அதைத் தார் ரோடாக மாற்றினால்தான் பஸ் போக்குவரத்து ஏற்பட முடியும், லாரி போக்குவரத்தும் ஏற்படும். தார் ரோடு இல்லாத நிலையில் மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் காரணத்தையொட்டி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதைத் தார் ரோடாக மாற்ற சர்க்கார் முயற்சி எடுக்குமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இப்பொழுது இருக்கும் தகவலைக் கொடுத்திருக்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யவேண்டியதைப் பின்னால் இருக்கும் வசதியைப் பொறுத்துச் சேர்த்துக்கொள்ளலாம்.

Andipatti–Theppampatti Road

* 205 *Q*.—SRI N. R. THIAGARAJAN: *கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, ஆண்டிப்பட்டி பிர்க்கா, ஆண்டிப்பட்டி-தெப்பம்பட்டி ரோடு மெட்டல் செய்யப்படாததன் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The road from Andipatti to Theppampatti is a District Board Road, formed with the District Board funds. The work of metalling the road is not included in any of the approved schemes. The District Board is not in a position to metal the road from out of its own funds.

16th August 1960]

SRI N. R. THIAGARAJAN: ஒவ்வொரு கிராமத்தையும் பிரதான ரோடுடன் இணைக்க வேண்டுமென்ற கொள்கைப் பிரகாரம் செய்து வருகிற காலத்தில், 30 கிராமங்களை இணைக்கும் வகையில் 8½ மைல் நீளத்தில் ரோடு போடப்படும். எட்டு ஆண்டு காலமாக மெட்டல் போடப்படாமல் இருக்கிறது. அதைச் சீக்கிரம் முடிக்கும்படி டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு உத்தர விடப்படுமா அல்லது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தி லாவது சேர்த்துக் கொள்ளப்படுமா? 9–00 a.m.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இப்போது அங்கே ரோடு போடப்பட்டிருப்பது டிஸ்ட்ரிக்ட் போர்டு வழியாகத்தான். கூடுதலான வேலைகள் செய்ய டிஸ்ட்ரிக்ட் போர்டிடம் "நிதி" இல்லாத காரணத்தால் அந்த வேலை இப்போது செய்யப்படாமல் இருக்கிறது. பிரதம எஞ்சினீயரைக் கேட்டதில் இப்போது அந்த ரோடு உபயோகிக்கும் நிலையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

SRI N. R. THIAGARAJAN: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா? 10 லட்சம் ரூபாய் சென்ற பட்ஜட் காலத்தில் நன்கொடை கொடுத்ததிலிருந்து இந்த ரோடைப் போடும்படி சர்க்கார் உத்தரவிடுவார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக்கொள்ளும் நிலைமை இருந்தால் பரிசீலனை செய்து சேர்த்துக்கொள்ள சிபாரிசு செய்யலாம்.

Elementary schools

*206 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 300 ஜனத்தொகைக்கு மேற்பட்ட எல்லா கிராமங்களிலும், 1960-ம் ஆண்டு இறுதிக்குள் ஆரம்பப் பாடசாலைகளைத் திறக்க உத்தேசமுண்டா?

(ஆ) இல்லை என்றால் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Only 72 such villages are now schoolless. The question of opening schools in these villages also is under consideration.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: அந்த 72 கிராமங்களுக்கு மேற்பட்டும் சில கிராமங்களில் பள்ளிகள் தேவை என்று மகஜர் வந்திருக்கிறதா? ஒரு கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள்ளாகப் பள்ளிக்கூடம் இருந்தால் அங்கு பள்ளிகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. நடுவில் ஏரிகள், ஆறுகள் உள்ள பகுதிகளிலாவது பள்ளிக்கூடங்கள் வைக்க அனுமதிக்கப்படுமா?